# இன்று தூய ஆவியாரின் பெருவிழா

திருவழிப்பாட்டு ஆண்டு C (19-05-2013)

## திருப்பலி முன்னுரை:

கிறிஸ்துவில் பிரியமுள்ளவர்களே, சிறார்களே, இளைய உள்ளங்களே, சகோதர சகோதிரியரே! நம்மை தாங்கியிருக்கின்ற திருச்சபையின் பிறப்பு விழாவை கொண்டாட ஒரே சமூகமாக நாம் கூடி வந்திருக்கின்றோம். இன்று தூய ஆவியாரின் விழாவைக் கொண்டாடுகின்றோம். எல்லோருக்கும் தூய ஆவிப் பெருவிழா நல்வாழ்த்துகள்!

உயிரற்ற மனநிலையோடு உடைந்துபோன கனவுகளோடு இருந்த அன்பு திருத்தூதர்கள் தூய ஆவியினால் உறுதிபடுத்தப்பட்டு, புதியதிருச்சபையின் புதியபாதையில் தைரியத்தோடு, நம்பிக்கையோடு சென்றதுபோல நம்மில் இருக்கும் பல்வேறு உயிரற்ற நிலைகளை இன்று தூய ஆவியானவர் நெருப்பினால் எரித்து நம்மை உறுதிபடுத்தி புதுப்பிப்பாராக. மரணத்தை, தூய ஆவியின் ஆற்றலைப் பெற்றவர்களாய் கிறிஸ்துவுக்கு சான்று பகரும் வரம் வேண்டி, இத்திருப்பலியில் நாம் உருக்கமாக மன்றாடுவோம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**அன்பே உருவான இறைவா,**

திருச்சபையின் மக்கள் அனைவரும் இறையன்பிலும் பிறரன்பிலும் வளர, தேவையான ஆர்வத்தையும், உற்சாகத்தையும் அளிக்குமாறு, எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் உமது அன்பில் வழிநடத்த வேண்டுமென்று உம்மைத் தாழ்மையுடன் மன்றாடுகிறோம்.

**எங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருகின்றவரும்: நீர் கூறிய அனைத்தையும் எங்களுக்கு நினைவூட்டுகின்றவருமான தூய ஆவியாராம் துணையாரை எங்களுக்குத் தரும் நல்ல தந்தையே!**

உம் மக்களாகிய நாங்கள் அனைவரும் நீர் கற்றுத்தரும் அனைத்தையும் முழுமையாகக் கடைப்பிடித்து, தூய ஆவியாரின் அசைவுகளுக்கு இசைந்து கொடுத்து, அவர் அருளும் புதியதும், புனிதமானதுமான இயல்புகளை அணிந்து கொண்டு வாழ அருள்தர வேண்டுமென்று தயவாய் உம்மை மன்றாடுகின்றோம்.

**வாழ்வளிப்பவராம் இறைவா,**

இன்றைய குடும்பங்களில் உண்மையான அன்பு நிலவிடவும், உறவுகளைச் சிதைக்கின்ற சுயநலம், பொருளாசை இவை மறைந்து தியாக மனம் உருவாகிட வேண்டுமென்று தயவாய் உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்பின் பிறப்பிடமே இறைவா,**

எம் இளைஞர்கள், இளம் பெண்கள் அனைவரும், இயேசு தம் திருத்தூதர்களுக்குக் கொடுத்தது போன்ற ஆற்றலையும், சக்தியையும் பெற்று தாம் வாழும் சமுதாயத்திற்கு நன்மை செய்கின்றவர்களாகவும், உமது நற்செய்தியின் தூதுவர்களாகவும் செயற்படும் சக்தியை அளித்துக் காத்திட வேண்டுமென்று தயவாய் உம்மை மன்றாடுகின்றோம்.

**என்றென்றும் பேரன்பை நிலையாகக் கொண்டுள்ள தந்தையே!**

பிரிவினைகளோடும், கசப்புணர்வுகளோடும், பழிவாங்கும் மனநிலையோடும், வேதனைகளோடும், விரக்தியோடும், கண்ணீரோடும் வாழும் கணவன், மனைவி அனைவர மீதும் மனமிரங்கி அவர்களின் அன்பு தூய்மையானதாகவும், நிலையானதாகவும் இருக்கவும், அவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கேற்ப பிரமாணிக்கமாய் வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திடவேண்டுமென்று தயவாய் உம்மை மன்றாடுகின்றோம்.